இணைந்த சேவைகள் சுற்றறிக்கை இல: 2/93

எனது இல. ஜீ/சிசி/57(அத்.11)
பொது நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07.
1993, ஏப்ரல் 30 ஆம் திகதி.

செயலாளர்கள் ,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

அரசாங்க சேவையிலுள்ள எழுதுநர் மற்றும் அதையொத்த தரங்களில் தொழில் புரியும் பட்டதாரிகளுக்குச் சலுகைகள் வழங்குதல்.

---

அரசாங்கம், அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும், எழுதுநர் மற்றும் அதையொத்த சேவைகளில் தொழில்புரியும் பட்டதாரிகள் உயர் பதவிகளுக்கான தேர்வுகளுக்குத் தோற்றுவதற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் அவசியத்தை உணர்ந்துள்ளது. ஆகையால் அவர்களுக்குப் பின்வரும் சலுகைகளை ஆட்சேர்ப்புக்கள், மற்றும் பதவியுயர்வுகளின் போது வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

02. அரசாங்க சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ளவையும், பட்டம் ஓர் அடிப்படைத் தகைமையாகவுடையவையுமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு, பதவியுயர்வுகளுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் அனைவரும் 26.01.1993 ஆம் திகதியிலிருந்து

(அ) இலங்கை நிருவாக சேவை, இலங்கை கடல்கடந்த சேவை, தொழில் அலுவலர் சேவை, சுங்கச் சேவை, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் சேவை முதலியவற்றுக்கு ஆட்சேர்க்கும் போது அரசாங்க சேவையில் பதவிநிலை அல்லாத தரங்களையுடைய பதவிகளை வகிக்கும் ஒரு பட்டத்தையுடைய இவ் அலுவலர்களதும் பிற அலுவலர்களதும் வயதெல்லையை அகற்ற வேண்டும்.

(ஆ) ஆட்சேர்ப்புத் தரத்தில் அத்தகைய தேர்வுகளுக்குத் தோற்றுவதற்கு விதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் எவ்வித வரையறையுமின்றி, அவற்றுக்குத் தோற்ற இவ்வலுவலர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

...02

(இ) இப்போது அவர்கள் பெறும் வேதனாதிகள், வேலை நிபந்தனைகள், அவர்கள் அனுபவிக்கும் சலுகைகள் முதலியவற்றில் எவ்வித மாற்றமுமின்றிப் பட்டதாரிகள் பதவிவழங்கும் திட்டத்தினுள் சேர்த்துக்-கொள்ளப்பட வேண்டும்.

ஒப்பம்: எம். என். ஜுனைட்.
செயலாளர்,
பொது நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

இக/-30.